**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**எஸ்.டி.சி. எண் : 224/2022**

**எ.சா : 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | மணிமாறன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சிவராஜ் |
| ஊர் | : | கிருஷ்ணாபுரம் |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | மின்சாரவாரியம் |
| மதம் | : | |
| வயது | : | 44 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 22.08.2023**

**புகார்தாரர் ஆஜர்.**

**<u>எதிரி தரப்பில் முதல் விசாரணை:</u>**

நான் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் வசித்து மின்சாரவாரியத்தில் பணிபுரிந்து வருகிறேன். புகார்தாரரை எனக்கு தெரியாது. புகார்தாரரின் கணவர் முகில் மட்டும்தான் தெரியும். புகார்தாரரை நீதிமன்றத்திற்கு வந்த பிறகு தான் எனக்கு தெரியும். நான் ரூ.1,00,000/– கடனாக முகில் என்பவரிடம் 02.02.2022 ஆம் தேதி எனது வீட்டு வழியாக வரும் போது கேட்டேன். முகில் என்பவர் தனது உறவினர் சின்னசாமி என்பவர் ஆம்பள்ளி கிராமத்தில் வசிப்பதாகவும், அவரிடம் பணத்தை கேட்டு வாங்கி தருவதாக என்னிடம் கூறினார். 18.02.2022 ஆம் தேதி முகில் எனக்கு போன் செய்து பணம் தயாராக உள்ளது என்றும், வந்து வாங்கிகொள்ள சொல்லி கூறினார். நான் அவரிடம் வேலையில் இருப்பதாக தெரிவித்தேன். நான் மாலை சுமார் 05.00 மணியளவில் ஆம்பள்ளி கிராமத்திற்கு பணத்தை வாங்குவதற்காக முகிலும், நானும் இரு சக்கர வாகனத்தில் சென்றோம். சின்னசாமி என்பவர் அங்கு மது வாங்கி வைத்திருந்தார். ஏற்கனவே முகில் மற்றும் சின்னசாமி என்பவர்கள் மது அருந்தி இருந்தார்கள். என்னையும் அருந்த சொன்னார்கள். நான் எனக்கு வீடு கட்டுவதற்காக பணம் தேவைப்படுகிறது என்று சொன்னேன். என்னிடம் பணத்தை தராமல் என் வசம்

இருந்த எனது காசோலையை கேட்டார்கள். என்னை மது அருந்தவும் சொன்னார்கள். பணத்தை தருவதாக சின்னசாமி உறுதி கூறினார். பின்னர் முகிலும், சின்னசாமியும் என்னிடம் இருந்த நான்கு காசோலைகளை என்னிடமிருந்து பிடுங்கி கொண்டார்கள். அந்த காசோலை எண்கள். 659380, 659381, 659382, 659383 ஆகும். காசோலையில் கையெழுத்தை போட்டால்தான் பணத்தை கொடுப்பதாக கூறினார்கள். காசோலையில் கையெழுத்து போடச்சொல்லி மிரட்டினார்கள். நான் உயிருக்கு பயந்து காசோலையில் கையெழுத்து செய்தேன். நீங்கள் பணம் தரவில்லை. அதனால் எனது காசோலையை தாருங்கள் என்று சொன்னேன். அவர்கள் தரவில்லை. நான் உயிருக்கு பயந்து கொண்டு பணமும் வேண்டாம், காசோலையும் வேண்டாம் என்று அங்கிருந்து வந்துவிட்டேன். நான் ஊரில் வந்து ஊர் பெரியவர்களிடம் சொன்னேன். அவர்கள் விசாரணை செய்து முகிலிடம் நீ பணம் வாங்கி தருவதாக அழைத்து சென்றுள்ளாய் எனவே காசோலையை கொடுத்து விடு என்று சொன்னார்கள். முகில் தன்னால் காசோலையை கொடுக்க முடியாது என்றும், என்னால் முடிந்ததை பார்த்து கொள்ள சொல்லி சொன்னார். பின்னர் இது சம்மந்தமாக 18.02.2022 ஆம் தேதி மத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க போனேன். அப்போது தேர்தல் நேரம் என்பதாலும், நான் மது அருந்தி இருந்ததாகவும், மறு நாள் காலை வந்து புகார் கொடுக்க காவல் நிலையத்தில் சொன்னார்கள். பின்னர் 19.02.2022 ஆம் தேதி புகார் கொடுத்தேன். மேற்படி புகாரின் பேரில் போலீசார் முகிலை அழைத்து விசாரணை செய்தார்கள். அப்போது முகில் காசோலையானது, வாகனத்திலிருந்து தவறி விழுந்துவிட்டதாகவும், அதை எடுத்து வைத்துள்ளதாகவும் கூறினார். அப்போது தன்னிடம் மூன்று காசோலைகள் மட்டும்தான் இருப்பதாகவும், ரூ. 1,00,000/– போட்ட காசோலை எண். 659382 தன்னிடம் இல்லை என்றும் கூறினார். பின்னர் எனக்கு சி.எஸ்.ஆர் நகல் 26.02.2022 அன்று கொடுத்தார்கள். பின்னர் விசாரணை முடித்து நான் சென்று விட்டேன். அதன் பிறகு வழக்கு காசோலையானது திருப்பப்பட்டதாக வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது. அந்த அறிவிப்பிற்கு நான் பதிலறிவிப்பு அனுப்பினேன். இந்த வழக்கானது என் மீது பொய்யாக போடப்பட்டுள்ளது. **நான் மத்தூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் கை நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சி.எஸ்.ஆர்.எண் 75/2022 ன் நகல் எ.சா.ஆ.2 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது. நான் எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பின் நகல் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 12 ஆம் வகுப்பு முடித்து விட்டு C.L.I.S (Library Course) படித்து முடித்துள்ளேன். நான் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் சுமார் 17 வருடமாக குடியிருந்து வருகிறேன். புகார்தாரரும், அவரது கணவரும் அதே ஊரில் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். முகில் எனக்கு 18 வருடங்களாக பழக்கம் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு மூன்று வருடமாகத்தான் பழக்கம். நானும், முகிலும் கிராமத்தில் பார்த்து கொள்ளும் தூரத்தில்தான் வசித்து வருகிறோம் என்று சொன்னால் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். முகிலன் வீடு எனக்கு தெரியும். முகிலனின் அப்பாவை தெரியும். முகிலனுக்கு 1 பையன் உள்ளார். பையன் பெயர் தெரியாது. முகிலனிடம் நான்தான் பணம்கேட்டேன். நான் வழக்கறிஞர் வைத்து பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். எ.சா.ஆ.3 அறிவிப்பில் 2 வது பாராவில் உமது கட்சிக்காரரின் கணவர் முகில் என்பவர் கடந்த 18.02.2022 ஆம் தேதியன்று ஒரு லட்சம் கடன் வாங்கி கொடுப்பதாகவும், அதற்காக செக் புக் எடுத்து வரச்சொல்லி கூறியுள்ளார். உமது கட்சிக்காரரின் கணவர் கூறியதன் பெயரில் எமது கட்சிக்காரரும் செக் புக்கை எடுத்து வந்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஊரிலிருந்து கிளம்பும் போதே நானும், முகிலும் மது குடித்துவிட்டுதான் சென்றோம். இரு சக்கர வாகனத்தை இருவரும், மாற்றி, மாற்றி சிறித்து நேரம் ஓட்டினோம். நான் குடிபோதையில் இருந்ததால் நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், அந்த சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் போதையில் இருந்ததால் எனது புகாரை காவல் நிலையத்தில் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். எ.சா.ஆ.1 புகாரில் காசோலை எண்கள் திருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. புகாரில் ரூ. 3000/−த்திற்கு 2 செக்குகளும், ரூ.1500/−க்கு 1 செக்கும் கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். சின்னசாமி என்பவர் எனக்கு தெரியாது. முகில் என்பவரின் சின்னமாமனார் என்று என்னை அழைத்து சென்றார். நான் எடுத்து சென்ற

காசோலை புத்தகத்தில் இந்த காசோலைகளை தவிர வேறு காசோலைகளை பயன்படுத்தவில்லை. வேறு காசோலைகளை வீட்டில் வைத்துள்ளேன். எனது புகாரில் காசோலை புத்தகத்தை எடுத்து சென்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் மத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பாக பர்கூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் ஆள்வரைக்காக பர்கூர் காவல் நிலையத்திற்கு என்னை மத்தூர் காவல் நிலையத்தார் அனுப்பி வைத்தார்கள். அங்கு விசாரணை செய்து பர்கூர் காவல் நிலையத்தின் ஆள்வரைக்கும், சம்பவ இடம் வரவில்லை என்பதால் மத்தூர் காவல் நிலையத்திற்கு அனுப்பி உதவி ஆய்வாளர் பார்வையிட்டு, சி.எஸ்.ஆர் நகல் வழங்கினார்கள். மேற்படி விவரங்கள் சுமார் 2 நாட்கள் நடந்தது. புகார் ஏற்பு இரசீதில் என்னிடம் எதிர்மனுதாரர் 1 லட்சம் ரூபாய் வாங்கியிருந்ததாகவும், அதை கேட்ட போது இரண்டு செக் கொடுத்ததாகவும், அதில் அவரது கணக்கில் பணம் இல்லை என்று கெட்ட வார்த்தையால் திட்டி மிரட்டியதாக புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் கடன் வாங்கியதாக குறிப்பிட்டுவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. புகாரிதாரரின் மகனை பற்றி தெரியும் என்று கூறியுள்ளதாலும், புகார்தாரரை தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரிடமிருந்து பெற்ற பணத்தை ஏமாற்ற வேண்டும்எ ன்பதற்காக பொய் சாட்சயம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரின் கணவருக்கு எந்த காலத்திலும் குடிபழக்கம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் டாஸ்மார்க்கில் நீண்ட நாட்களாக வேலை பார்த்து குடிக்கு அடிமையாகி தற்போது பொய்யாக புகார்தாரரின் கணவர் குடிக்கிறார் என்று கூறியுள்ளேன் என் று சொன்னால் சரியல்ல. சட்ட அறிவிப்பிலும், முதல் விசாரணை சாட்சியத்திலும் முன்னுக்கு முரணாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே வழக்கு கசோலையை தொகையை கடமைபட்டவன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.